**கொட்டகல பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொட்டகல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 28 ஆம் திகதி மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தால் கிடைக்க வேண்டிய ரூபா 2,451,249 தொகைக்கு உரிய நிதி ஒதுக்கீடு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கூட கிடைத்திராத நிலையில் நிதி ஒதுக்கீட்டைப் பூரணப்படுத்த உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் கையிருப்புக் கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கு ரூபா 2,451,249 தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அமைச்சினால் பெற்றுத் தரப்பட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையால் கொள்வனவு செய்வதில் சிக்கல்கள் உள்ளதோடு இது தொடர்பாக சபையின் நிதிக் குழுவின் கவனத்தில் கொண்டு வந்து அந்தக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த ஆண்டுக்குள் உரிய பொருட்களைக் கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணத்துக்கு கணக்கீடுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 1,781,620 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஈ) | வரவிருக்கும் ஆண்டுக்கான முந்தைய வருமானம் ரூபா 483,563 தொகை ஆக இருந்த போதிலும், இருப்பு நிலை ஏட்டில் ரூபா 132,244 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இல் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 218 விதி | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபைக்குரிய சொத்துகளை மதிப்பீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. |
| (இ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீத வரியை அறவிடுவதற்கான ஆதனங்களின் மதிப்பீடு 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்தத் தொகையை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் இலக்கம் 371 (2) (அ) | பல்வேறு தரப்பினருக்கு 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 38,487 | முற் கொடுப்பனவுத் தொகையை | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | பெறுமதியான முற்கொடுப்பனவுத் தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5 வரித் தேவைப்பாட்டுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட ரூபா 25,115 ஆன முத்திரை கட்டண வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கவில்லை. | முத்திரை வரிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு இலக்கமொன்று கிடைக்காமையால் அனுப்பிவைக்க முடியாதிருந்தது. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட ரூபா 56,799 ஆன முத்திரை கட்டண வரி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | தேசத்தை கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு இலக்கமொன்று கிடைக்காமையால் அனுப்பி வைக்க முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,799,040 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 566,329 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,760,000 | 2,248,777 | 2,512,926 | 2,459,076 | 2,911,946 | 1,229,892 | 691,013 | 2,172,510 |
| வாடகை | 2,028,800 | 1,781,496 | 1,907,639 | 412,521 | 410,000 | 1,131,225 | 973,149 | 538,664 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,820,600 | 1,461,710 | 1,461,710 | - | 2,228,000 | 650,800 | 656,800 | - |
| ஏனைய வருமானம் | 1,070,000 | 5,966,100 | 6,288,875 | 1,446,874 | 889,961 | - | 181,073 | - |
| மொத்தம் | 6,679,400 | 11,458,083 | 12,171,150 | 4,318,471 | 6,439,907 | 3,011,917 | 2,502,035 | 2,711,174 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையரின் 2016 மார்ச் 17 ஆம் திகதிய மமா/உ..ஆ..ஆ/2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகள் மதீப்பிடு செய்யப்பட்டிருக்க வில்லை என்பதோடு, அவற்றுக்கு வாடகை வழங்க வேண்டியவர் களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தங்கள் மேற்கொள்ளப் படாமல் 2014 ஆம் ஆண்டில் நுவரெலிய பிரதேச சபையின் வருமான வரி பரிசோதகரால் மதிப்பிடப்பட்ட வாடகையே அறவிடப்பட்டு வந்தது. | உரிய மதிப்பீட்டைச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த கடைகளை மதிப்பீடு செய்வதற்கு திட்ட வரைபடங்கள் இல்லாத காரணத்தால், திட்ட வரைபடங்களைத் தயாரித்து மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்து மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 60 கடைகளுக்கு ரூபா 400 இலிருந்து ரூபா 750 வரை மாதாந்த வாடகை அறவிடப்பட்டுக் கொண்டிருந்ததோடு மொத்த மாதாந்த வாடகைகளின் கூட்டுப் பெறுமதி அண்ணளவாக ரூபா 41,500 தொகை அளவில் இருந்தது. | உரிய மதிப்பீட்டில் கடை வாடகைகளைஅறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த கடைகளை மதிப்பீடு செய்வதற்கு திட்ட வரைபடங்கள் இல்லாத காரணத்தால், திட்ட வரைபடங்களைத் தயாரித்து மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்து மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான லொக்ஹில் பிரதேசத்தில் காணப்படும் காணித் துண்டுகள் 09 இற்கு | நிலுவை வாடகைகளை அறவிட | அந்த இடம் சம்பந்தமான ஒரு கணக்கெடுப்பை மேற்கொள்ள நடவடிக்கை |

| | |
|---|---|
| குத்தகைதாரர்களிடம் இருந்து 43 மாதங்களில் இருந்து 126 மாதங்கள் வரையாக காலப் பகுதிக்குரியதாகக் காணப்பட்ட நிலுவை வாடகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது. |

2.2.3 **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 1,446,874 அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டும். | மாகாண சபையிடமிருந்து விடுவிப்பதில் தாமதமொன்று காணப்படுவதுடன் பணத்தை விடுவிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ளது. |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1. செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) **சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 இலக்கம் 53 மற்றும் 1988 இலக்கம் 56 உடைய சட்ட விதிமுறைகளின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் பின்பற்றப்படும் விதிமுறைகளுக்கு இணங்க வெளியிடப்பட்டுள்ள 2008 ஜனவரி 25 திகதியிட்ட இலக்கம் 1523/16 உடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு | தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | காலாவதியாகிப் போயுள்ள சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் சம்பந்தமான கணக்கெடுப்பொன்றை நடத்தி காலத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

காலாவதியாகிப் போயிருந்த 03 வர்த்தகங்களுக்கு உரிய புதிய அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2015 மே 11 ஆந் திகதி ரூபா 83,373,432 செலவில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்துடன் 2016 திசம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 21,559,211 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்வாக மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக அதன் வேலைகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன. | உரிய தரப்பினருடன் ஒரு இணக்கத்துக்கு வந்து செயற் திட்டங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடே வண்டும். | உரிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற போதிலும் நிலவும் சட்டச் சிக்கல்கள் காரணமாக அந்த செயற்திட்டம் தாமதாகிக் கொண்டு வருகிறது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக பிரதேச சபை போதியளவில் அறிந்திருக்கா திருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்கு திட்டமிடப்பட்டிருக்கா ததோடு எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளான சபைக்குச் சொந்தமான லொறி வாகனம் | உரிய விசாரணையை உடனடியாகப் பூர்த்தி செய்து தேவையான | காப்புறுதித் தொகையை வழங்க காப்புறுதித் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்காததோடு உரிய காப்புறுதித் திணைக்களத்திடமிருந்து எவ்விதமான நஷ்ட ஈட்டுத் தொகையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மறுத்துள்ளது. நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விசாரணையை மேற்கொள்ள உள்ளதுடன் இதுவரையில் விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | கொடகல பிரதேச சபை நிறுவப்பட்டு 02 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கழிந்துள்ள போதிலும், முன்பிருந்த நுவரெலிய பிரதேச சபையினால் பொறுப்பளிக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்கள் 17 இனை சட்ட பூர்வமாக உரித்தாக்கிக் கொண்டிருக்கவில்லை. | சட்ட பூர்வமாக உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்ட பூர்வ உரிமையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (இ) | நிதி விதிமுறை 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகதத்தர் களிடமிருந்து பிணைத் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய பொறுப்புகளை நிறைவேற்றும் உத்தியோகதத்தர் களிடமிருந்து பிணையத் தொகையை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஊழியர் பிணையத் தொகையை ஜுன் மாதத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 14 பதவிகளில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்குரிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான முதல் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுடுள்ளன. அவை நிறைவடைந்ததும் ஆட்சேர்ப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவிகளுக்கு உரிய உத்தியோகத்தர்களைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சிறிய குபோட்டா ரக ட்ரக்டர் வண்டியொன்று மற்றும் டேலர் வண்டிகள் 04 உம் அகற்றப்படாமல் பிரதேச சபை வளாகத்திலேயே நிறுத்தப்பட்டிருந்தன. | பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த சொத்துகள் சபைக்குச் சொந்தமானவையல்ல. இவை நுவரெலிய பிரதேச சபைக்கு உரிய சொத்துகள் ஆகும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 193 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினங்களுக்கு இடையே இடம்பெறும் வேறுபாடுகள் தொடர்பாக விளக்கமளித்தல் கூற்றொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய விதி முறைகளின் பிரகாரம் வேறுபாடுகள் குறித்த விடயங்களைத் தெளிவு படுத்தி அறிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்து வரும் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை சரியாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |